**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 3/2025**

**Date** : 21.01.2026.

**வா.சா. 1** - ஜெயபிரிதா

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் பிரதிவாதிக்கு சொந்தமான என்றால் இல்லை. பிரதிவாதியை எவ்வளவு நாளாக தெரியும் என்றால் சுமார் 5 வருடம். வாதி ஊரில் இருந்து பிரதிவாதி ஊர் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1½ கி.மீ தூரம் இருக்கும். வழக்கு பட்டிகை சொத்திற்கு எல்கை குறித்து முன்பணம் செலுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி முன்பணம் செலுத்துவதற்கு முன்பாக வழக்கு பட்டிகை சொத்தினை சென்று பார்வையிட்டேனா என்றால் ஒருமுறை பார்வையிட்டேன். அவ்வாறு சென்று பார்க்கும் சமயத்தில் வழக்கு பட்டிகை சொத்தில் பாதை இருந்ததா என்றால் பாதை வழியாக தான் வழக்கு பட்டிகை சொத்திற்கு சென்றோம். அருகில் உள்ள தோப்பு வழியாக செல்லவில்லை என்றால் சரிதான். பாதை இல்லாத வழக்கு பட்டிகை சொத்திற்கு பாதையில் பிரச்சனை இருப்பதாக பிரதிவாதிகள் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

உண்மையில் பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்திருந்தால் அதனை சரிசெய்து தருவதாக ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டிருந்திருப்போம் என்றால் சரியல்ல பாதை இருக்கும் என்று நினைத்து முன்பணம் செலுத்தினோம் பின்பு 28 நாட்கள் கழித்து பாதை இல்லை என்பது தெரியவந்ததும் பணத்தை திரும்ப கேட்டபோது அவர்கள் தரவில்லை. ஒப்பந்த பத்திரத்தில் பாதை குறித்து குறிப்பிடப்படவில்லை என்பதால் வழக்கு பட்டிகை சொத்தில் பாதை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து பாதை இல்லாத

காரணத்தினால் ஏற்கனவே ஒப்புக்கொண்ட பணத்தை விட குறைவான பணத்திற்கு மிரட்டி வாங்கிவிடலாம் என்ற நோக்கத்தில் பத்திரபதிவை நாங்கள் தவிர்த்து வந்தோம் என்றால் சரியல்ல. ஒப்பந்த பத்திரம் காலாவதியான பின்பு வழக்கு பட்டிகை சொத்தை அதிகவிலைக்கு வாங்க வந்தவர்களின் வீட்டிற்கு சென்று அவர்களை மிரட்டி வழக்கு பட்டிகை சொத்தை விற்கவிடாமல் செய்தோம் என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கு அவ்வாறு 2,30,000/- நஷ்டம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. ஆகையால் மேற்படி பணத்தை முழுவதுமாக பிரதிவாதிக்கு கொடுக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்றால் சரியல்ல. பத்திரபதிவு செய்யப்படவில்லை என்றால் முன்பணத்தை பிரதிவாதிகள் எனக்கு திருப்பி தருவதாக ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை விற்பனை செய்ததும் பணத்தை திரும்ப தந்துவிடுவதாக கூறினார்கள். ஒப்பந்தப்பத்திரத்தில் பிரதிவாதிகள் எவ்வித உத்திரவாதமும் தராத காரணத்தினாலும் பிரதிவாதிகளுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுத்தியதாலும் முன்பணத்தை பிரதிவாதிகளிடம் இருந்து நான் திரும்பபெற உரிமையில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியபோது அருகில் யார் இருந்தார்கள் என்றால் எனது தம்பியும், தம்பி மனைவியும். மேற்படி பேச்சுவார்த்தை எங்கு வைத்து நடந்தது என்றால் பிரதிவாதி வீட்டில் நடந்தது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் பிரதிவாதி வீட்டில் வைத்து எழுதினோம். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**